Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125
DHINATH DHALAM Tamil & English daily Paper
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 · இதழ் Issue : 38 · திங்கள் Monday · 08.12.2025 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

## முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் மதுரை முதலீட்டாளர்கள் மாநாடு:

# ரூ.36,660 கோடி மதிப்பிலான 91 ஒப்பந்தங்கள் கையெழுத்து




மதுரை:

ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து இதுவரை 11 லட்சத்து 83 ஆயிரம் கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடுகளை கொண்டு வந்திருக்கிறோம் என்றும், 34 லட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதிசெய்திருக்கிறோம் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நடைபெற்ற TN Rising முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர்மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை: எங்களின் அன்பான அழைப்பை ஏற்று, இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு வருகை தந்திருக்கக்கூடியதொழில்நிறுவனங்களின் தலைவர்கள், முதலீட்டாளர்கள் அனைவரையும் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே நலிவடைந்திருந்த தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை நடத்தினோம். அதன்பிறகு, வெளிநாடுகளுக்குச் சென்று முதலீடுகளை ஈர்க்கத்திட்டமிட்டு நான் பயணங்களை மேற்கொண்டேன். ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின், அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சென்று முதலீட்டாளர்களை சந்தித்துப் பேசி, அவர்களைத்தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வைத்தோம்.

முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு தான் என்ற நிலையை உருவாக்கினோம். அதனை உறுதிப்படுத்துகின்ற வகையில், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில், TN Rising என்றமாநாடுகளை தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறோம். அதன்படி தூத்துக்குடி, ஓசூர், கோவை, நகரங்களில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினோம். அதன் தொடர்ச்சியாக இன்று மதுரையில் இந்த முதலீட்டாளர் மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த மாநாட்டில், 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக 36 ஆயிரத்து 660 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டு, 56 ஆயிரத்து 766 பேருக்கு வேலைவாய்ப்பும் உருவாக்கப்படுகிறது. ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து இதுவரை 11 லட்சத்து 83 ஆயிரம் கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடுகளை கொண்டு வந்திருக்கிறோம். 34 லட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதி செய்திருக்கிறோம்.புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில், 80 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட திட்டங்கள், நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

முதலீடுகள் எல்லாம் சாதாரணமாக கிடைத்துவிடாது. முதல்வர் கேட்டார் என்பதற்காக மட்டும், யாரும் முதலீடு செய்ய முன் வரமாட்டார்கள். முதலீடுகள்செய்வதற்குமுன்பு, அந்த மாநிலத்தின் கொள்கைகள் என்ன? மனிதவள திறன், உட்கட்டமைப்புகள், சட்டம் ஒழுங்கு,நிர்வாகத்திறன் மற்றும் நீண்டகால நிலைத்தன்மை போன்ற அனைத்தையும் நுணுக்கமாக ஆய்வு செய்து, தங்கள் வணிக நோக்கங்களுக்கு மிகவும் பொருத்தமான இடத்தைத்தான் முதலீட்டா ளர்களான நீங்கள் தேர்வு செய்வீர்கள். அப்படி தேர்வு செய்யும்போது தமிழ்நாடுதான் உங்கள் மனதுக்குள் இருக்கிறது என்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

மதுரைக்கு மற்றொரு பெயர் இருக்கிறது. தூங்கா நகரம். அதை அப்படிச் சொல்வதைவிட எப்போதும் விழிப்புடன் இருக்கக்கூடிய நகரம் என்று தான் சொல்ல வேண்டும். வைகை நதி பாயும் மண்; மீனாட்சியம்மன் கோயிலின் கலை அழகுக்கு நிகரானது எதுவுமில்லை; இங்கே. மல்லிகை மணக்கும்; நள்ளிரவிலும் இட்லியில் ஆவி பறக்கும்! சுங்குடி சேலைகள், கைவினைப் பொருட்கள் எல்லோரையும் ஈர்க்கும். மதுரையை ஒட்டி வைகை ஆற்றங்கரையில் அமைந்த கீழடியில்,தமிழர்களின் நாகரிகம் எந்தளவுக்கு தொன்மையானது என்று உலகத்துக்கு எடுத்துக்காட்டக்கூடிய வகையில் சான்றுகள் எல்லாம் நமக்கு கிடைத்திருக்கிறது. இந்தியாவின் வரலாற்றையே அந்தச்சான்றுகள் மாற்றி எழுத வைத்திருக்கிறது. நம்முடைய அறிவார்ந்த, மதச்சார்பற்ற வாழ்க்கை முறையையும் உலகுக்கு மீண்டும் நினைவூட்டி இருக்கிறது. அதனால்தான் இந்தியாவின் வரலாற்றை தமிழ்நாட்டில் இருந்து தொடங்கி எழுதவேண்டும் என்று நான் அடிக்கடி சொல்லி வருகிறேன்.

பழைய மதுரையின் மரபு, பண்பாடு, வரலாற்றுச் சின்னங்கள் போன்றவற்றை பாதுகாக்கின்ற அதேவேளையில், தற்காலத் தேவைகளுக்கும் எதிர்கால எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப தானாகவே வளர்ந்து வருகின்ற மதுரை, தொழில் நகரமாக மிளிர அனைத்துத் தகுதியும் கொண்ட நகரம்!புதுப்புது மாற்றங்களை தக்க வைத்திருக்கின்ற நகரம் என்கிற வகையில், தென் தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப மையமாகவும் மதுரை உயர்ந்து வருகிறது. TVS ஸ்ரீசக்ரா, டா:ஃபே, JK :ஃபென்னர், இன்:ஃபினிக்ஸ், தியாகராஜர் மில்ஸ், மதுரா கோட்ஸ், ஹனிவெல், HCL என்று பல்வேறு நிறுவனங்கள் தங்களின் தொழில் திட்டங்களை மதுரையில் நிறுவி இருக்கிறார்கள்.வேலம்மாள் மருத்துவமனை, மீனாட்சிமிஷன் மற்றும் அப்பல்லோ போன்ற தலைசிறந்தமருத்துவமனைகள், மருத்துவத் துறையில் தனி சாதனைகள் படைத்துக் கொண்டு வருகிறது.பெரும் முதலீடுகளை செய்து ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தினார்கள். மதுரையின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கிறார்கள்.

தேனி மாவட்டத்தில், 424 ஏக்கர் பரப்பளவில், ஒரு பொதுப் பொறியியல் பூங்கா மற்றும் மெகா உணவுப் பூங்கா அமைக்கப்பட்டிருக்கிறது. சிவகங்கை மாவட்டத்தில், இலுப்பைக்குடி பகுதியில் 108 ஏக்கரும், கழனிவாசல் பகுதியில் 102 ஏக்கரும் தொழிற்பூங்கா உருவாக்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தில், 314 கோடி ரூபாய் மதிப்பிலான டைடல் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டத்தில் டைடல் நியோ பூங்காநிறுவப்பட்டு வருகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில், புதிய விமான நிலையத்தை அமைக்கின்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

தூத்துக்குடி, ஓசூர், கோயம்புத்தூர் நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகளில், கிட்டத்தட்ட 1 லட்சம் கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட முதலீடு கிடைத்திருக்கிறது. 2 லட்சம் நபர்களுக்கு உறுதி செய்யப்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு வர இருக்கிறது. அந்த வகையில், 186 திட்டங்களை ஈர்த்திருக்கிறோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று மேற்கொள்ளப்படுகிறது. தென் மாவட்டங்களில், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், பயோ எனர்ஜி துறையில், 11 ஆயிரம் கோடி ரூபாயை முதலீடு செய்திருக்கிறது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கீழடியின் பாரம்பரியத்திலிருந்து இன்றைய நாகரிகம் வரை தன்னை தகவமைத்துக் கொண்டுள்ள இந்த மண், மனித நாகரிகத்தின் தளராத வளர்ச்சியை தன்னகத்தே தாங்கி நிற்கிறது. இந்த அனுபவங்களின் அடித்தளத்தில், 42 இலட்சம் மக்கள் தொகையை எதிர்நோக்கி நகர் ஊரமைப்பு இயக்ககம் (DTCP) தயாரித்துள்ள மதுரைமாஸ்டர் பிளான் 2044 – புதிய நகர்ப்புற வடிவமைப்பை கொண்டிருக்கிறது.

விளையாட்டு பொம்மைகள் உற்பத்தியில் தமிழ்நாட்டை முன்னணி மையமாக மேம்படுத்தவும், விளாச்சேரி, அம்பாசமுத்திரம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த கலைஞர்களின் பாரம்பரிய பொம்மை தயாரிப்பு திறனை உயர்த்தவும், அவர்களுக்கு புதிய சந்தை, வடிவமைப்பு மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குகின்ற வகையிலும் இன்றைய தினம் தமிழ்நாடு பொம்மை உற்பத்திக் கொள்கை-யை வெளியிடுவதில் நான் பெருமை அடைகிறேன்.

தொழில் மற்றும் கல்வித்துறை சேர்ந்து அறிவுப்பொருளாதாரம் உருவாக வேண்டும் என்று தான், தமிழ்நாடு பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பூங்கா அறக்கட்டளை என்கிற புதிய நிறுவனத்தை அமைத்திருக்கிறோம். புதுமையை ஆரத்தழுவி வரவேற்கும் மதுரை மண்டலத்தில், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் அந்த பகுதியிலுள்ள முக்கிய நிறுவனங்களுடன் இணைந்து, 13 கோடி ரூபாய் தொடக்க முதலீட்டில், பல்கலைக்கழக ஆராய்ச்சி பூங்காவிற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த நிறுவனம் 2 கோடியே 25 லட்சம் ரூபாய் மானியத்துடன் பயன்பாட்டு ஆராய்ச்சி திட்டங்களுக்கு நிதியளிக்கிறது. இந்தத் திட்டங்களுக்கான முதல் தவணையாக 75 இலட்சம் ரூபாய் ஆராய்ச்சியாளர்களிடம் இந்தநிகழ்ச்சியில் நான் வழங்கி இருக்கிறேன்.

தமிழ்நாட்டை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்தும் குறிக்கோளோடு நாங்கள் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தப் பயணத்தில், முதலீட்டாளர்களின் பங்கு மிக மிக முக்கியமானது. இந்ததருணத்தில், தமிழ்நாட்டில் முதலீடுகள், விரிவாக்கத் திட்டங்கள் மேற்கொண்ட அனைத்து முதலீட்டாளர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் ஆதரவு தொடர வேண்டும்! உங்கள் வருங்காலத் திட்டங்கள் எல்லாவற்றையும் தமிழ்நாட்டிலேயே மேற்கொள்ள வேண்டும்! இணைந்து வளர்வோம்! இணையற்ற வளர்ச்சியை பெறுவோம். இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை யாற்றினார்.

இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, கே. கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பெரிய கருப்பண், ராஜகண்ணப்பன், மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், டி.ஆர்.பி. ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பாதாளத்திற்கு சென்றுவிட்டது:

# அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



சென்னை,

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் ஸ்டாலின் மாடல் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு பாதாளத்திற்கு சென்றிருப்பதை கடந்த 24 மணி நேரத்தில் வந்த செய்திகளே தெளிவாக உணர்த்துகின்றன.

கும்பகோணம் அருகே பட்டீஸ்வரம் பள்ளி மாணவர்கள் இடையேயான மோதலில் தாக்கப்பட்ட +2 மாணவர் பரிதாபமாக உயிரிழப்பு, மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் எடை தராசால் அடித்து காய்கறிகடைக்காரர்கொலை,

தென்காசியில் சொத்து தகராறில் விவசாயி வெட்டிப் படுகொலை,

சேலம் தோப்பூர் பகுதியில் தலை துண்டித்து கொல்லப்பட்ட இளைஞரின் தலையை தேடும் போலீசார், நாகர்கோவிலில் பட்டப்பகலில் சாலையில்நடந்துசென்ற பெண்ணை வழிமறித்து திருட முயற்சி, என தொடர்ச்சியாக வரும் செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

பள்ளி மாணவர்கள் இடையே படிப்பு தான் வளர வேண்டும். ஆனால், ஸ்டாலின் ஆட்சியில் வன்முறைபோக்கு தான் அதிகரித்து வருகிறது. கொலை வரை நீண்டுள்ள இந்த மோதல் வெறியை கட்டுப்படுத்தத் தவறியதற்கு முதல்-அமைச்சரின் அரசு வெட்கப்பட வேண்டும். விவசாயி, வியாபாரி, பெண், இளைஞர் என யாருக்குமே பகல், இரவென எந்த நேரத்திலும் துளி கூட பாதுகாப்பு இல்லாத ஒரு அவலத்தின் மொத்த உருவான ஆட்சியைத் தான் மு.க.ஸ்டாலின் நடத்தி வருகிறார்.

சட்டம் ஒழுங்கு சீர்கெட்டதால் தான் தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் சீர்கெட்டு உள்ளது. சுய விளம்பரத்தில் திளைக்கும் முதல்-அமைச்சர் இதை எப்போது தான் உணரப் போகிறாரோ?. ஆட்சியில் இருக்கப் போகும் நான்கு மாதங்களிலாவது சட்டம் ஒழுங்கின் மீது கவனம் செலுத்துமாறு ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
தினத்தளம்
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில்**
**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# டிச. 9 முதல் 6 நாட்களுக்கு தமிழத்தில் மிதமான மழைக்கு வாய்ப்பு



சென்னை: நாளை (டிச.9) முதல் 6 நாட்களுக்கு தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "தமிழகத்தை நோக்கி வீசும் கிழக்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக நாளையும், நாளை மறுதினமும் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும்,புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.10 முதல் 13-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (டிச.8) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். வட தமிழக கடலோரப் பகுதிகளில் 9-ம் தேதியும், தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் 10-ம் தேதியும் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிமீ வேகத்திலும், இடையிடையே 55 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தமிழகத்தில் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக புதுக்கோட்டை மாவட்டம் மிமிசலில் 4 செமீ, ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை, திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, காக்காச்சி, நாலுமுக்கு, புதுக்கோட்டை மாவட்டம் ஆயிங்குடி ஆகிய இடங்களில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சேலம் மேற்கு மாவட்ட போராட்ட களத்தில் வெள்ளிவிழா லோகோ அறிமுக நிகழ்வு

சேலம்மாவட்டம்ஓமலூரில் நடைபெற்ற டிசம்பர் 6 கருப்பு நாள் லோகோ அறிமுகம் நிகழ்வு சேலம் மேற்கு மாவட்ட SMI மாவட்ட மாவட்ட தலைவர் அப்துல் அக்கீம் தமுமுக மாவட்ட செயலாளர்



மாபெரும் கோரிக்கை போராட்டத்தில் தமுமுக மாணவரணியின் வெள்ளி விழாவை முன்னிட்டு அண்மையில் தலைமையகத்தில் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா MLA வெளியிட்ட செயலாளர் நாகூர் மீரான் தலைமையில் நடைபெற்றது.

இதில் மனிதநேய வழக்கறிஞர் சங்கம் மாநில செயலாளர் முஜிபுர்ரஹ்மான்,மாநில செயற்குழு உறுப்பினர் முகமது ரயீஸ்,தமுமுக அமானுல்லா,மமக மாவட்ட செயலாளர் அல்லாபக்ஸ் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் , நகர நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு லோகோவை அறிமுகம் செய்தனர்.

# சி.பி.இ.கொல்கத்தா கிரிக்கெட் கிளப் சார்பாக இரத்த தான முகாம்

## கோவையில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் முகாமில் பங்கேற்றனர்

கோவையில் செயல்பட்டு வரும் சி.பி.இ. கொல்கத்தா கிரிக்கெட் கிளப் நான்காவது ஆண்டு துவக்க விழா கிரிக்கெட் கிளப் சார்பாக இரத்த தான முகாம் மற்றும் பொது மருத்துவ முகாம் இடையர் வீதி மராத்தா பவன் அரங்கில் செய்தனர்.. இதே போல பொது மருத்துவ முகாம் நடைபெற்றது..

இதில்,மருத்துவ பரிசோதனை,ஹீமோகு-





வெகு விமரிசையாக நடைபெற்றது..

ஒவ்வொரு ஆண்டும் வங்கதேச தொழிலாளர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் பங்கு பெறும் கிரிக்கெட் போட்டிகளை கொல்கத்தா கிரிக்கெட் கிளப் ஒருங்கிணைத்து வருகின்றனர்..

இந்நிலையில் சி.பி.இ.கொல்கத்தா நடைபெற்றது...

அரசு மருத்துவமனையுடன் இணைந்து,சி.பி.இ.கொல்கத்தா கிரிக்கெட் கிளப் ஒருங்கணைப்பாளர்கள் இர்ஃபான்,ஷாரூக்,நஸ்ரூதின் ஆகியோர் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இதில், நூற்றுக்கும் மேற்பட்ட கிளப் உறுப்பினர்கள் இரத்ததானம் ளோபின்,இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவு உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டன..

ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் நடைபெற்ற இதில் கோவையில் பல்வேறு இடங்களில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கோவை புலியகுளம் அடுத்த பெரியார் நகரில், அன்னல் அம்பேத்கரின் நினைவு தினத்தை முன்னிட்டு

# அவரது திருவுருவச் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்திய இராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் அமைப்பினர்

கோவை மாவட்டம் புலியகுளம் அடுத்த பெரியார் நகர் பகுதியில், திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாநகர் மாவட்ட பொருளாளர் சௌந்தர் குமார், சிங்கை செல்வராஜ்,



அன்னல் அம்பேத்கரின் நினைவு தினத்தை முன்னிட்டு, இராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் சார்பாக, அதன் மாவட்ட தலைவர் எம்எஸ் பார்த்திபன் தலைமயில், சர்க்கிள் தலைவர் கனேசன், வார்டு தலைவர் காந்தன், லூயிஸ், ஆகியொர் முன்னிலையில், அம்பேத்கர் திருவுருவ படத்-அவரது திருவுருவச் படத்திற்கு முன்பாக அனைத்து நிர்வாகிகளும் உறுதிமொழியும் எடுத்து கொண்டு, அம்பேத்கரின் நினைவுகளை கோஷங்களாக எழுப்பினர். இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியின்மாவட்டதலைவர் விஜயகுமார், ஐஎன்டியுசி பொதுச்செயலாளர் கோவை செல்வம், சேவாதள செந்தில், சிங்காநல்லூர் சண்முகம், ராவகன், மணிகண்டன், வெங்கடாசலம், ஜெயராஜ், ஜெயபால், செல்வராஜ், சுப்ரமணியம், ரங்கசாமி, குழந்தையம்மாள், ராஜாமணி, கௌசல்யா, சங்கீதா, வினோத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மதுரையில் அழகர் மருத்துவமனை திறப்பு விழா கோலாகலம்

கோச்சடைமேலக்கால் மெயின்ரோடுஸ்சென்ட்ரல் பள்ளி அருகில் அழகர் மருத்துவமனையினை குணசேகரன் அமுதா Dr வாசுதேவன்MS(ortho) Drஜோதி பிரியாMBBS கார்த்திகேயன்BE PGபைனான்ஸ் ஆகியோர்ரிப்பன்வெட்டி திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர் இந்நிகழ்ச்சியில் அழகர் கிளினிக் ஊழியர்கள் மற்றும் உறவினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## பெண்களுக்கு பாதுகாப்பான சமுதாயத்தை உருவாக்கவேண்டுமென வலியுறுத்தி

# 500 கிலோ மீட்டர் தூரத்தை 15 மணி நேரத்தில் கடந்து விழிப்புணர்வு பயணத்தை மேற்கொண்ட கோவை அல்ட்ரா சைக்கிளிஸ்ட்

150 மைல் தூரத்தை சைக்கிளில் கடந்து பயணிக்கும் வீரர்களை யவை இந்தப் பயணத்தின் முக்கியக் கருப்பொருள்களாக அவர் தேர்வு அருகே துவங்கி கோவை மாநகரக்காவல்ஆணையர் அலுவலகத்தில்



அல்ட்ரா சைக்கிளிஸ்ட் என அழைப்பதுண்டு, அதே போல பல மைல் தூரத்தைகடந்துசாதனை செய்துள்ள கோவையை, சேர்ந்த அல்ட்ரா சைக்கிள் வீரர் ஜி.டி.விஷ்ணுராம், பெண்களின் பாதுகாப்பு மற்றும் சைபர் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 500 கிலோமீட்டர் தூர சைக்கிள் பயணத்தை மேற்கொண்டார். இந்த தூரத்தை வெறும் 15 மணி நேரம் 8 நிமிடங்களில் நிறைவு செய்து சாதனையும் செய்துள்ளார். பெண்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்துங்கள்", "சைபர் குற்றங்களில் இருந்து விழிப்புடன் இருங்கள்" மற்றும் "போதைப்பொருட்கள் 'நோ' சொல்வோம்" வேண்டாம் என்று சொல்லுங்கள்" ஆகி-செய்துள்ளார்.

இது குறித்து விஷ்ணுராம் செய்தியாளர்களிம் கூறியதாவது.. டிசம்பர் 6ஆம் தேதி இராமேஸ்வரம், தனுஷ்கோடியில் இருந்து தனது சைக்கிள் பயணத்தை துவங்கியதாகவும், மறுநாள் டிசம்பர் 7ஆம் தேதி காலை கோவையில் தனது பயணத்தை நிறைவு செய்ததாகவும் கூறினார்.

இந்த விழிப்புணர்வு பேரணியை இராமநாதபுரம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ் தனுஷ்கோடியில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தாகவும், அங்கிருந்து இராமநாதபுரம்,மதுரை,தேனி வழியாகக் கோவையை அடைந்ததாக தெரிவித்தார்.

இந்தப் பயணத்தின் நிறைவு பகுதி கோவை விமான நிலையம் முடிவற்றது.

இதில் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் கார்த்திகேயன் கோவை மாநகர காவல் ஆணையர் ஏ. சரவண சுந்தர், உள்ளிட்ட பல முக்கிய அதிகாரிகள் பங்கேற்று விஷ்ணுராம்க்கு வாழ்த்து தெரிவித்தனர்.

தன்னுடன் இந்த இறுதி பகுதியில் பயணம் மேற்கொண்ட அரசு மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு விஷ்ணு ராம் நினைவு பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

மேலும், இந்த பயணம் கின்னஸ் சாதனைப் புத்தகம், ஆசிய புக் ஆப் ரெகார்டஸ் மற்றும் இந்தியா புக் ஆப் ரெகார்டஸ் போன்ற சாதனைப் புத்தகங்களில் இடம்பெறும் ஒரு அதிகாரப்பூர்வ முயற்சியாக அமைந்துள்ளது எனவும் கூறினார்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959




ஈரோடு மாவட்டம் பவானி அருகே குருப்பநாய்க்கன்பாளையம் ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோயிலில் நேற்று (டிச.07) சங்கு பூஜை, சிறப்பு அபிஷேகம்அலங்காரம்மற்றும்தீபாராதனைவிமரிசையாக நடைபெற்றது. பால், பன்னீர், தேன், இளநீர் உள்ளிட்ட அஷ்ட திரவியங்களால் விநாயகருக்கு அபிஷேகமும், பூக்களால் அலங்காரமும் செய்யப்பட்டன. பின்பு சகஸ்ரநாம அர்ச்சனை செய்து தீபாராதனை நடைபெற்றது .இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் நேற்று (07.12.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் படைவீரர் கொடிநாள் நிதி வசூல் செய்யும் பணியினை உண்டியலில் நிதி செலுத்தி துவக்கி வைத்தார். உடன் உதவி இயக்குநர் (மு.கூ.பொ) (முன்னாள் படைவீரர் நலன்) புஷ்பலதா உட்பட பலர் உள்ளனர்.

## உணவுத்துறை தொடர்பான தொழில் முனைவோர்களை இணைக்கும் வகையில்

# கோவையில் ஃபுட் பிரெனர் அமைப்பு துவக்கம் சிறுநீரக நோய் பாதித்தவர்களுக்கு உதவும் நோக்கில் சுகா சேரிட்டபிள் டிரஸ்ட் சார்பாக புதிய முயற்சி

சிறுநீரகம்தொடர்பான நோய்கள் தற்போது அதிகரித்துவரும்நிலையில் பொருளாதார நிலையில் பின்தங்கியோர் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் அது தொடர்பான நோய்க்குசிகிச்சைசெய்வதில் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்..

சிறுநீரகம் தொடர்பான நோய்களில்பாதித்தவர்களை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான உதவிகளை கோவையில் செயல்பட்டு சுகா சேரிட்டபிள் டிரஸ்ட் வழங்கி வருகிறது..

இந்நிலையில் புதிய முயற்சியாக உணவு துறை தொடர்பான தொழில் துறையினரை இணைத்து, இந்த சமூக பணியை கூடுதலான நபர்களுக்கு கொண்டு செல்லும் வகையில் புதிய அமைப்பை உருவாக்கி உள்ளனர்... சுகா சர்க்கிள் ஃபுட்பிரனெர் எனும் அமைப்பாக துவங்கி உள்ள இதில்,கோவை மற்றும் அதன் சுற்றுப்புறபகுதிகளில் உணவு தொடர்பான தொழில்களில் ஈடுபட்டு வரும் பல்வேறு துறையினரை உறுப்பினர்களாக இணைத்துள்ளனர்.. இந்நிலையில் இதற்கான துவக்க விழா பிராட்வே மேக்னஸ் ஓட்டல் அரங்கில் நடைபெற்றது...

இதில் பேசிய அவ்வமைப்பின் தலைவர் ராஜன் ஆறுமுகம், சிறுநீரகம் தொடர்பான நோய்களுக்கு தீர்வு காண்பது மற்றும் நிதி உதவிகளை சுகாசேரிட்டபிள் டிரஸ்ட் தொடர்ந்து செய்து வருவதாக கூறிய அவர்,இது போன்றசமூக நல பணிகளை இன்னும் கூடுதலான நபர்களுக்கு செய்யும் வகையில் இந்த ஃபுட்பிரனர் அமைப்பு உறுதி செய்யும் என தெரிவித்தார்..

அதே நேரத்தில் சமூக நலன் கருதி வரும் தொழில் முனைவோர்கள் இந்த அமைப்பின் வாயிலாக தங்களது தொடர்பு கொண்டு தங்-







களது தொழில்களை மேம்படுத்த உதவும் வகையில் ஃபுட்பிரெனர் அமைப்பை உருவாக்கி உள்ளதாக தெரிவித்தார்.. இனி வரும் காலங்களில் இதேபோலவெவ்வேறு துறை சார்ந்த தொழில் முனைவோர்கள் அமைப்பை உருவாக்கி சர்வதேச அளவில் கடுமையான சிறுநீரக செயலிழப்பு மற்றும் இறுதிநிலை சிறுநீரக நோய் உள்ளவர்களுக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்வதற்கான உதவிகளை சுகா சேரிட்டபிள் டிரஸ்ட் கூடுதலாக செய்ய உள்ளதாக அவர் கூறினார்..

இந்த சந்திப்பின் போது ,சுகாசேரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனர்கள் சந்தோஷ் குமார்,ராதா ஜனனி நிர்வாகிகள் சரவணா வெங்கடேஷ்,சண்முகராஜ், வீரமணிகண்டன்,காஜா மொய்தீன்,யுவராஜ் ,பார்கவி உட்பட பலர் உடனிருந்தனர்..

# தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். சீர்திருத்தம் மூலம் ஒரு கோடி வாக்காளர்களை நீக்க பாரதிய ஜனதா கட்சி திட்டம்

## வி.சி.க. பொதுச்செயலாளர் ரவிக்குமார் எம்.பி. குற்றச்சாட்டு





தமிழ்நாட்டில் எஸ் ஐ ஆர் சீர்த்திருத்தம் மூலம் ஒரு கோடி வாக்காளர்களை நீக்க பாரதிய ஜனதா கட்சி திட்டம் இதற்கு இந்திய தேர்தல் ஆணையமும் துணையாக இருப்பதாக உளூந்தூர்பேட்டையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளர் ரவிக்குமார் எம்பி குற்றச்சாட்டு மேலும் திமுக கூட்டணி வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் தொடருமா என்ற கேள்விக்கு அவர் பதில் அளிக்க மறுப்பு...*

எஸ் ஐ ஆர் நடவடிக்கையின் மூலமாக தமிழ்நாட்டில் ஒரு கோடி வாக்குரிமை பறிக்க ஒன்றிய அரசு முயற்சிக்கும் நேரத்தில் அதற்கு தேர்தல் ஆணையமும் உடந்தையாக இருக்கிறது எனவே வாக்குரிமையை அடிப்படை உரிமைகளின் ஒன்றாக சேர்க்க தமிழக அரசு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என உளூந்தூர்பேட்டையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார் செய்தியாளர் சந்திப்பில். விடுதலைசிறுத்தைகட்சி சார்பில் வேண்டுகோள் வைப்பதாக கூறினார்: -*

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளூந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் திருப்பரங்குன்றம் பிரச்சனை கலவரத்தில் ஈடுபட்டவர்களை தமிழக அரசு யுஏபிஏ (உபா)சட்டத்தின் கீழ் கைது செய்ய வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்ட செயலாளர் அறிவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் துரை ரவிக்குமார் கலந்துகொண்டு கோஷமிட்டு கண்டன உரை நிகழ்த்தினார்தொடர்ந்து செய்தியாளர் சந்தித்து பேசுவையில் :- தீவிர திருத்த வாக்காளர் பட்டியல் 4-ம்தேதியுடன் முடியடையும் என்று சொன்னார்கள் ஆனால் ஒரு வார கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது இப்பொழுது வர தகவலின்படி வாக்காளர் பட்டியில் உள்ள 85 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுவார்கள் என்ற அதிர்ச்சி தரும் செய்தி வந்துள்ளது.இன்றைக்கு சேகரித்த தகவலின் படி அந்தஎண்ணிக்கைஅதிகரித்து சுமார் ஒரு கோடி பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படும் என்ற அபாயம் உள்ளதாக சொல்லப்படுகிறது 2002எஸ்ஐஆர்தகவலை நிரப்பி தர வேண்டும் சொன்னார்கள் அதன் நிரப்புவதற்குஎந்தஆதாரம் இல்லாத காரணத்தினால் மக்கள் அதை நிரப்பிதர முடியவில்லை எனவே வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ள நேரத்தில் உச்சநீதிமன்ற வழக்கை ஏமாற்றுவதற்காக தேர்தல் ஆணையம் 2002 தகவல் இல்லாவிட்டாலும் அந்த படிவத்தை

அப்படியே கொடுங்கள் என்று பலவந்தப்படுத்தி வாங்குகிறார்கள். அப்படி வாங்கும் போது பத்து சதவீதம் படிவங்கள் வழங்கப்படவில்லை இருந்தாலும் 13 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காட்டி இந்த நாட்டின் குடிமகன் தான் என்று நிரூபிக்க வேண்டும் நிலை உள்ளது இது சட்டவிரோதமானது இதை செய்வதற்கு தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் இல்லை என விடுதலைசிறுத்தைகட்சி சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது

13 ஆதாரங்களில் ஒன்று ஆதார் ஆனால் நிபந்தனைக்கு உட்பட்டது என்று சொல்லப்படுகிறது ஆதாரைக் கொடுத்து சேருங்கள் என்று சொன்னால் அது அதிகாரிகள் மறுக்கிறார்கள் ஆனால் அவர்களுக்கு ஆதரவை வைத்து வாக்காளர் படியும் பூர்த்தி செய்யக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

அரசுத்துறைகளில் இருக்கிறார்களா அவர்கள் சொத்தாவணங்கள் இருக்கிறதா என இது போன்ற ஆவணங்களை காட்டி தான் வாக்காளர்களாக சேர்த்துக் கொள்ள முடியும் நிலை ஏற்பட்டுள்ளது

எனவேஎஸ்ஐஆர்நடவடிக்கையின் மூலமாக தமிழ்நாட்டில் ஒரு கோடி வாக்குரிமை பறிக்க ஒன்றிய அரசு முயற்சிக்கும் நேரத்தில் அதற்கு தேர்தல் ஆணையமும் உடந்தையாக இருக்கிறது எனவே வாக்குரிமையை அடிப்படை உரிமைகளின் ஒன்றாக சேர்க்க தமிழக அரசு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் வேண்டுகோள் வைப்பதாக தெரிவித்தார். தொடர்ந்து வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி தொடருமா என்ற செய்தியாளர்களின் கேள்விக்குவிசிகபொதுசெயலாளர் ரவிக்குமார் எம்பி பதில் அளிக்க மறுப்பு தெரிவித்தார்.



புரட்சி பாரதம் கட்சியின் சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம் எம். குன்னத்தூர் அங்கன்வாடியில் புரட்சியாளர் அம்பேத்கர் அவரது 70 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு புரட்சி பாரதம் கட்சியின் கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்ட செயலாளர் K.K. ஏழுமலை அவர்கள் திரு அம்பேத்கரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மெழுகுவத்தி ஏத்தி மலர் தூவி வீரவணக்கம் செய்து 100 மேற்பட்டபள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு பேனா புத்தகம் சிலேட் பல்பம் ஆகியவற்றை வழங்கினார்

# சாக்கோட்டை த.வெ.க. மேற்கு ஒன்றிய அலுவலகம் திறப்பு விழா



மக்கள் விரும்பும் முதல்வர் வேட்பாளர் மற்றும் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழகத்தின் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் (Ex. MLA) அவர்களின் வழிகாட்டுதலின்படி,

தமிழக வெற்றிக் கழகம் - சாக்கோட்டை மேற்குஒன்றியதலைமை அலுவலகம் 06/12/2025 மாலை 4:00 மணி அளவில் கோட்டையூர் அழகாபுரியில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிவகங்கை வடக்கு மாவட்ட கழக செயலாளர் திரு. ஜோசப் தங்கராஜ் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கழகக் கொடியை ஏற்றி வைத்து அலுவலகத்தை திறந்து வைத்தார்.

நிகழ்வை ஏற்பாடு செய்து, தலைமை தாங்கியவர் ஒன்றிய கழக செயலாளர் க.சரத்பாலமுருகன்

இதில்மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணியின் நிர்வாகிகள் மற்றும் திரளான தொண்டர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். அலுவலக திறப்பு விழா நிறைவடைந்ததும்

ஒன்றிய செயலாளர் க. சரத்பாலமுருகன் தலைமையில் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை & பயிற்சி நிகழ்ச்சி ஆர்வமுடன் நடைபெற்றது.

கலந்து கொண்ட அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றி!

# சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் சதுரங்க விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது



தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் சதுரங்க விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது

ஆசிரியை முத்துமீனாள் வரவேற்றார். தலைமையாசிரியர் லெ.சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். சதுரங்க பயிற்றுனரும் , நடுவருமான விக்னேஷ் மாணவர்களுக்கு சதுரங்கம் விளையாடு வதனால் ஏற்படக்கூடிய நன்மைகளையும், அதனால் நமது வாழ்க்கை திறன் மேம்பாடு குறித்தும் விரிவாக விளக்கினார் .

அவர் மாணவர்களிடம் பேசுகையில், நாம் சதுரங்கம் விளையாடுவதால் நம்முடைய மூளை நன்கு வளர்ச்சி அடையும். ஞாபகசக்தி அதிகரிக்கும். நம்முடைய வாழ்க்கை மேன்மை அடையும். நீங்கள் இப்பொழுது சிறிய வகுப்புகளில் படிக்கிறீர்கள். போகப்போக 10, 12 என பெரிய வகுப்புகளில் படிக்க ஆரம்பிக்கும்போது உங்களுக்கு நிறைய புரிதலில் பிரச்சனைகள் ஏற்படும். அதையெல்லாம் போராடி ஜெயிக்க வேண்டும். நாம் என்ன செய்கிறோம் என்பது முக்கியமல்ல. நாம் முதலில் பிரச்சினைகளை சந்திக்க கற்றுக்கொள்ள வேண்டும்.நாம்சிறுவர்களாக இருக்கும்போது நமக்கு முடிவெடுக்க தெரியாது. பெற்றோர்கள்,ஆசிரியர்கள் நமக்கு முடிவு எடுக்க உதவி செய்வார்கள்.

நாம் சதுரங்க விளையாட்டில் எந்த இடத்தில் எதை வைக்கணும் என்று நாம் யோசித்து விளையாடுவது, நம் வாழ்க்கையில் நிர்வாகத் திறனை மேம்படுத்தவும் உதவவும். நீங்கள் என்ன படித்திருந்தாலும் சதுரங்க விளையாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அந்த ஆர்வம் ஏற்பட்டால்தான் நீங்கள் மிகப்பெரிய வெற்றி அடைய முடியும்.

சதுரங்கத்தில் ஆர்பிட்டர் தேர்வுகள் எழுதி நடுவர்களாக தேர்வாக முடியும். அது நமக்கு பல வகையிலும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும்.

சதுரங்க விளையாட்டு நமக்கு நிறைய பிரச்சினைகளைகையாளும் திறன்களை வளர்க்க உதவி செய்யும். இவ்வாறு நடுவர் சதுரங்க பயிற்சியாளர் நடுவர் விக்னேஷ் பேசினார் மாணவர்களின் பல்வேறு சந்தேகங்களுக்கு பதில்கள் வழங்கப்பட்டது. ஆசிரியை ஸ்ரீதர் நன்றி கூறினார்.




ஈரோடு மாவட்டம் மேட்டூர் சாலையில் இந்தியாவின் முன்னணி அழகு பிராண்டான நேச்சுரல்ஸ் சலூன் ஈரோட்டில் அதன் புதிய தி பியூட்டி ஸ்டோர் பை நேச்சுரல்ஸ் விற்பனை நிலையத்தைத் தொடங்கியுள்ளது. ஈரோடு BAE நிலையத்தை நேச்சுரல்ஸின் நிறுவனர் சி.கே.குமாரவேல் திறந்து வைத்தார். ஈரோடு, அழகு சாதனப் பொருட்களுக்கான வேகமாக வளரும் சந்தை என்று குமாரவேல் கூறினார். இந்த புதிய நிலையம், உலகளாவிய பிராண்டுகள் உட்பட மேக்கப், சருமப் பராமரிப்புப் பொருட்கள் மற்றும் மேம்பட்ட தோல் பகுப்பாய்வுக் கருவி போன்ற தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளையும் ஈரோடு வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இதன் மூலம் பிரீமியம் அழகுப் பொருட்களை வாங்கும் அனுபவம் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.



ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் நேற்று (07.12.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற படைவீரர் கொடிநாள் விழாவில் முன்னாள் படைவீரர்களின் சிரார்களுக்கு கல்வி உதவித்தொகையினை வழங்கினார்.



அம்பேத்கரின் நினைவு தினத்தை முன்னிட்டு,ஈரோடு தெற்கு மாவட்ட பா.ஜ.க. சார்பில் ஈரோடு பன்னீர் செல்வம் பூங்கா அருகே அமைந்துள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வு (டிச.06) நடைபெற்றது. இந்நிகழ்வில் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சி.சரஸ்வதி, ஈரோடு தெற்கு மாவட்ட பா.ஜ.க. தலைவர் எஸ்.எம்.செந்தில் உட்பட கட்சியினர் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அண்ணல் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி ஈரோடு, நந்தா பொறியியல் கல்லூரி கூட்டரங்கில், (06.12.2025) அன்று நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பயனாளிக்கு விலையில்லா தையல் இயந்திரத்தினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாநிலகங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உதவி ஆட்சியர் (பயிற்சி)காஞ்சன் சௌதரி , மாவட்ட ஆதிதிராவிடர்மற்றும்பழங்குடியினர்நலஅலுவலர்மகேஸ்வரி,மாவட்டபிற்படுத்தப்பட்டோர்மற்றும்சிறுபான்மையினர் நல அலுவலர் முரளி உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அண்ணல் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி ஈரோடு, நந்தா பொறியியல் கல்லூரி கூட்டரங்கில், (06.12.2025) அன்று நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , மாநிலகங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ்,ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி ,மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மகேஸ்வரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முரளி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டக் தமிழக வெற்றிக் கழக அலுவலகத்தில், அண்ணல் அம்பேத்கரின் நினைவு தினத்தை முன்னிட்டு, அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதற்கு மாவட்ட செயலாளர் பாலாஜி தலைமை வகித்தார். இந்நிகழ்வில் தவெக மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அரசு கல்லூரி பணியாளர்களுக்கு 9 மாதமாக சம்பளம் நிலுவை உடனே வழங்க வேண்டும்

## பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை: அரசு கல்லூரிகளின் தினக்கூலி பணியாளர்களுக்கான 9 மாத நிலுவை ஊதியத்தை உடனே வழங்க வேண்டும் என்றும், 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றுபவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,'தமிழகம்முழுவதும் பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்கி வந்த 41 உறுப்பு கல்லூரிகள் கடந்த 2019-ஆம் ஆண்டு அரசு கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டன. இந்த கல்லூரிகளில் 2006-ஆம் ஆண்டு முதல் உறுப்புக்கல்லூரிசெயல்பட தொடங்கியதில் இருந்து 20 ஆண்டுகளுக்கும்மேலாகதுப்புரவாளர், பெருக்குபவர், அலுவலக உதவியாளர், இரவு காவலர் போன்ற ஆசிரியரல்லா பணியாளர்கள் 231 பேர் தினக்கூலி அடிப்படையிலேயே பணியாற்றி வருகின்றனர்.

20 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றும் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும்மறுபுதுப்பித்தல் அடிப்படையில் தினக்கூலி ஊழியர்களாகவே பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு நாளொன்றுக்கு 420 ரூபாய் முதல் 520 ரூபாய் வரை என மாதம் 9,240 முதல் 11,440 வரை தான் ஊதியம் வழங்கப்படுகிறது.

இவர்களை நிரந்தர பணியாளர்களாக மாற்றி விடக்கூடாது என்பதற்காகவே அந்தந்த கல்வி ஆண்டில் புதிதாக பணியில் சேர்வதை போல ஒவ்வொரு ஆண்டும் மறு புதுப்பித்தல் அடிப்படையில் பணியாற்ற செய்கிறது பல்கலைக்கழக நிர்வாகங்கள்.மிகக்குறைந்த சொற்ப அளவிலான ஊதியத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வரும் இவர்களுக்கு இந்த 2025-26 ஆம் கல்வி ஆண்டுக்கான மறு புதுப்பித்தல் கூட செய்யப்படவில்லை. இவர்கள் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையி லும் 9 மாதங்களாக அந்த சொற்ப ஊதியம் கூட வழங்கப்படவில்லை.

மேலும் பணியாற்றிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு மறு புதிப்பித்தல் செய்யாததும், மாத ஊதியத்தை வழங்காமலும் இருப்பதும் அவர்களின் தகுதி, பணித்திறன் போன்றவற்றை உதாசீனப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவர்கள் குடும்பங்களின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் பாழாக்குவது போன்றதாகும்.

கடந்த 23.9.2024 அன்று தமிழகஅரசின் உயர்கல்வித்துறை வெளியிட்ட அரசாணையின்படி இவர்களின் ஒட்டுமொத்த சம்பளத்திற்காக ஆண்டுக்குருபாய் 3கோடி தான் செலவழிக்கப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்கல்வித்துறையில் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கும் தமிழ்நாடு அரசு பத்தாண்டுகளுக்கும் மேலாக தினக்கூலி ஊழியர்களாக பணியாற்றும் இவர்களின் பணிகளுக்காக கடந்த 9 மாதங்களாக இந்த தொகையை கூட செலவழிக்க முடியவில்லை என்பதை ஏற்க இயலாது. எனவேநிலுவையிலுள்ள கடந்த 9 மாதங்களுக்கான ஊதியத்தை உடனடியாக வழங்குவதுடன் இந்த 231 பேரின் தகுதி, திறமை, பணித்திறன், அனுபவம் போன்றவற்றை கருத்தில் கொண்டு 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றுபவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என தமிழ்நாடு அரசை கேட்டுக்கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.





# ஈரோட்டில் தளிர் குழந்தைகள் சிறப்பு பல் மருத்துவமனை திறப்பு விழா

ஈரோடு பிரப்ரோடு அம்சா சுப்பிரமணியம் மருத்துவமனை வளாகத்தில் தளிர் குழந்தைகள் சிறப்பு பல் மருத்துவமனை திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதித் துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி மருத்துவமனையைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இந்த விழாவில், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகர மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் செல்வராஜ், 19வது வார்டு மாமன்ற உறுப்பினர் மணிகண்ட ராஜா மற்றும் ரோஜா ரியல் எஸ்டேட் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தளிர் குழந்தைகள் சிறப்பு பல் மருத்துவமனையின் மருத்துவர்களான டாக்டர்.மிதுன் ராஜ் மற்றும் டாக்டர். பவித்ரா ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று உபசரித்தனர். குழந்தைகளின் பல் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இந்த மருத்துவமனை தொடங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்த க்கது.

# பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை காரணமாக அக்கா கணவரை கொன்ற கொலை வழக்கில் மைத்துனர் கைது

ஈரோடு மாவட்டம் கோபி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட வாய்க்கால் ரோடு, LIG காலனியில் வசித்துக்கொண்டு, பழைய இரும்பு வியாபார தொழில் செய்து வந்த பாபு என்பவரின் மகன் விஜயகுமார் (40) என்பவர் அவரது வீட்டின் படுக்கையறையில் மர்மான முறையில் கத்திக்குத்து காயங்களுடன் இறந்து கிடப்பதாக விஜயகுமாரின் அண்ணன் கொண்டப்பன் (45) என்பவர் கொடுத்த புகாரில் கோபி காவல் நிலையத்தில் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு சம்மந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு எதிரியை தேடி வந்த நிலையில், இன்று 05.12.2025 ம் தேதி சந்தேகத்தின் பேரில் தலைமறைவாக இருந்த விஜயகுமாரின் மைத்துனரான பவானி, திருநீலகண்டர் வீதியைச்சேர்ந்த லேட் சுப்பிரமணியத்தின் மகன் செந்தில்குமார் என்பவரை கோபி காவல் நிலைய ஆய்வாளர் தமிழரசு தலைமையிலான தனிப்படை, கோவை மாவட்டம், போத்தனூரில் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலை வைத்து, அங்கு சென்று செந்தில்குமாரை பிடித்து நிலையம் அழைத்துவந்து விசாரித்ததில் செந்தில்குமாருக்கும் அவரது அக்கா கனகமணியின் கணவரான விஜயகுமாருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 03.12.2025ம் தேதி விஜயகுமார் அவரது வீட்டில் தனியாக இருப்பதை தெரிந்து அவரது வீட்டிற்கு சென்று தகராறில் ஈடுபட்டு கத்தியால் குத்து கொலை செய்துவிட்டு தப்பிச்சென்றுவிட்டதாக வாக்குமூலம் கொடுத்ததன் அடிப்படையில் எதிரியை கைது செய்து நீதிமன்றம் முன்பு ஆஜர் செய்யப்பட்டு கோபி நடுவர் நீதிமன்ற நீதிபதி உத்தரவுபடி 15 நாட்கள் கோபி மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார் என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# கோவா தீ விபத்து குறித்து விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்: காங்கிரஸ் தலைவர் கார்கே வலிறுத்தல்

புதுடெல்லி: வடக்கு கோவாவின் அர்போராவில் இரவு விடுதி ஒன்றில் சனிக்கிழமை இரவு ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் 25 பேர் உயிரிழந்தநிலையில், இது குறித்து விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்குமாறு அங்குள்ள காங்கிரஸ் தொண்டர்களை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "கோவாவின் அர்போராவில் 20க்கும் மேற்பட்டோர் உயிரிழக்கக் காரணமான தீ விபத்து குறித்து அறிந்து மிகவும் வேதனை அடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்துகள். இது ஒரு விபத்து மட்டுமல்ல, இது ஒரு அரசாங்க தோல்வியும்கூட. வெளிப்படையான விசாரணை மூலம் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இதுபோன்ற துயர சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கப்பட வேண்டும்" என தெரிவித்துள்ளார்.




காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி வத்ரா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "கோவாவின் அர்போராவில் நிகழ்ந்த தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். நினைத்துப் பார்க்க முடியாத ஒரு இழப்பு இது. இந்த விபத்தில் காயமடைந்த அனைவரும் விரைவாக குணமடைய பிரார்த்திக்கிறேன்.

# Trump To Ban Visas For FactCheckers, Censors: How It Will Affect Indians

*New Delhi:*

*The Donald Trump administration has directed US embassy officials to reject visa applicants who have worked in roles related to fact-checking, content moderation, compliance, or online safety, according to a State Department memo obtained by Reuters. The new visa restrictions are expected to disproportionately impact technology workers, particularly those applying from countries like India.*

*The memo instructs consular officials to deny visas to anyone seen being "responsible for, or complicit in, censorship or attempted censorship of protected expression in the United States." The directive applies to all visa types, including journalists and tourists, but focuses primarily on H-1B visas, typically granted to highly skilled foreign workers in technology and related sectors.*



*Applicants' professional histories, LinkedIn profiles, and social media accounts will be scrutinised for involvement in activities such as combating misinformation, content moderation, trust and safety, and compliance. Evidence of participation in such roles could render applicants ineligible for entry.*

*A State Department spokesperson said, "While we do not comment on allegedly leaked documents, make no mistake, the Administration has made clear that it defends Americans' freedom of expression against foreigners who wish to censor them. We do not support aliens coming to the US to work as censors muzzling Americans. Allowing foreigners to lead this type of censorship would both insult and injure the American people," as per The Guardian.*

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.